

பெரம்பலூர் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணிக்கு உறுப்பினர்கள் சேர்க்கை படிவத்தை கழகத் துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளிடம் வழங்கினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட தலைவர் த. சந்தோஷ்குமார், மாவட்ட அமைப்பாளர் ம.மணிவாசகம், துணை தலைவர் த.அறிவழகன், துணை அமைப்பாளர்கள் பெ.கோவிந்தராஜ், த.கருணாநிதி, சு.சதீஷ், ரா.சீனிவாசன், சி.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள்:

# கரூர் மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜி அறிவிப்பு!

கரூர், ஜூன் 2-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்டம் முழுவதும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும், நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கி, விளையாட்டு போட்டிகள் நடத்தி இனிப்பு வழங்குவது என மாவட்ட செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் வி செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் (கலைஞர் அறிவாலயம்) கரூர் மாவட்ட கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார்,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ் பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே. வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்து க்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம். ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே. ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம். ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய செயலாளர் இ.ராமர் (முன்னாள் எம்எல்ஏ), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் செயலாளர் க.முரளிராஜா, புலியூர் பேரூர் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராய புரம் பேரூர் செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர் செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர் செயலாளர் எம். முத்து (எ) சுப்பிரமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.நாகரத்தினம், பி.காமராஜ், கீதா மணிவண்ணன், எஸ்.காமராஜ், ஏ. அறிவழகன். ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

கரூர் மாவட்டம், மாநகரம், நகரம், ஒன்றியம், பேரூராட்சி கழகங்கள் மற்றும் வார்டுகள் கிளைகள் மற்றும் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் கழக அனைத்து சார்பு அணிகளின் சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு, 362025 அன்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திடவும், நலத்திட்ட உதவிகள் உணவு வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், இனிப்பு வழங்குவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ் இனத்திற்கும் தமிழ்நாட்டு மக்களுக்காகவும், ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும், நான்கு ஆண்டு சாதனைகளால் தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்து திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களின் நான்கு ஆண்டு சாதனை திட்டங்களை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் கரூர் மாவட்டத்தில் உள்ள பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் சார்பில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர் திராவிட முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆட்சிக்கு பெருமை சேர்க்கும் வகையில் நடைபெற இருக்கின்ற 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் கரூர் மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள் சிறப்பாக செயல்பட்டு, கரூர், அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம், குளித்தலை, ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் கழக வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து மாண்புமிகு தளபதி அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# சேலம் மத்திய மாவட்டத்தில் திருவுருவச் சிலைக்கு மாலை!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், ஜூன் 2-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாளான ஜூன் 03 செவ்வாய்க்கிழமை அன்று காலை 08.30 மணி அளவில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பில் 4-ரோடு அண்ணா பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்குமாவட்டக் கழக, மாநகரக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழக, ஊராட்சிக் கிளைக் கழகசெயலாளர்கள், பேரூர் வார்டு கழக செயலாளர்கள், மாநகர வட்டக்கழக செயலாளர்கள், மாவட்டக் கழக பிரதிநிதி கள், அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் தலைவர் கலைஞர் மீது பற்றுள்ள பொதுமக்கள்என அனைவரும் கலந்துகொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், கீரனூர் உத்தமநாத சுவாமி உடனுறை பிரஹதம்பாள் திருக்கோயிலில், புதிய திருத்தேர் பிரதிஷ்டை மற்றும் வெள்ளோட்ட விழாவினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்தார். உடன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, செயல் அலுவலர் (திருக்கோயில்கள்) முத்துராமன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### கோவை மாநகர் மாவட்டம் முழுவதும்

# முத்தமிழ் அறிஞர் - கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா!

## கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, ஜூன் 2-

முத்தமிழ் அறிஞர் செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் அவரது திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சி கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு : தமிழ் இனத்திற்காக, தமிழ் மொழிக்காக, தமிழர்களின் கலை, கலாச்சாரம், நாகரீகம், பண்பாட்டினை பாதுகாப்பதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு இரவென்றும், பகல் என்றும் பாராமல் அயராமல் உழைத்த மாமனிதர் தலைவர் கலைஞர் அவர்கள். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, உள்ளாட்சித் துறையில் பெண்களுக்கு 50 சதவீதம் இட ஒதுக்கீடு, பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ், சத்துணவுத் திட்டத்தில் முட்டை சேர்ப்பு திட்டம், தமிழ் வழியில் பயின்ற 50 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்கள் ரத்துசெய்தல் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், அவசர கால மருத்துவ ஊர்தி 108 சேவை திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவி த்திட்டம்,

கை ரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமணத் திட்டம், உழவர் சந்தை திட்டம், கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிப்பு, மே தினத்துக்கு அரசு விடுமுறை என பல திட்டங்களை கொண்டு வந்தவர் தலைவர் கலைஞர். அவர் தான் போட்டியிட்ட அனைத்து சட்டப்பேரவை தேர்தல்களிலும் மகத்தான வெற்றி வாகை சூடி, 19 ஆண்டு காலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக, மக்களின் மனங்களை கவர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ் உள்ளவரை தலைவர் கலைஞர் புகழ் ஓங்கட்டும்! நம் இதயத்துடிப்பாகவும், குருதி ஓட்டமாகவும் இருந்து ஒவ்வொரு நாளும் நம்மை இயக்கிக் கொண்டிருப்பவர் தலைவர் கலைஞர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அன்புத் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, முத்தமிழ் அறிஞர் செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தலைமையில் நாளை (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 8.00 மணியளவில் காந்திபுரம், அண்ணா சிலை முன்பு, முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில், கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், மாநகராட்சி மண்டலத்தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பொது மக்களை சந்தித்து நலம் விசாரித்து ஆய்வு மேற்கொண்டதோடு, கடந்த 2018 கஜா புயலின் போது சேதமடைந்திருந்து இது நாள் வரை பல்வேறு மாசு தொடர்பான புகார் எழுந்து வரும் 500 KLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மாற்றாக புதிய 1000 KLD கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்காக அரசு சுமார் 3 கோடியே 62 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதை சுட்டிக்காட்டி, விரைவாக அந்த பணி முடிக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுவதோடு, மாசு கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ள விதிகளின்படி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று கூறி பத்திரிகையாளர்களுக்கு விளக்கம் அளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுராந்தகம் சி. ஆறுமுகம்

**ஜூன் 2 (2005)**



கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

மதுராந்தகம் ஒன்றியச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகள் செங்கற்பட்டு மாவட்டக் கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் – தி.மு.க. அறக்கட்டளை உறுப்பினர், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளையும் வகித்தவர்.

மூன்று முறை மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். குறிப்பாக, 1984ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 90 பேர் இவரை எதிர்த்து போட்டியிட்ட போதும், கடுமையாக போராடி வெற்றி பெற்றவர்.

1949 முதல் 2005 வரை கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தில் ஒரு வருடம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**